# உலகளாவிய ஜெப கொண்டாட்டம் - 2024

**துதி** – கர்த்தர் பெரியவர்: தலைவர், மற்றவர்களை விட முதன்மையானவர், குணத்திலும் தரத்திலும் குறிப்பிடத்தக்கவையில் உயர்ந்தவர்; அளவு, பட்டம், சக்தி, வலிமை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்கது.

கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.
1 நாளாகமம் 29:11

கர்த்தராகிய ஆண்டவரே, நீர் உமது அடியேனுக்கு உமது மகத்துவத்தையும் உமது வல்லமையுள்ள கரத்தையும் காண்பிக்கத் தொடங்கினீர்; வானத்திலும் பூமியிலும் உம்முடைய கிரியைகளுக்கும் உம்முடைய வல்லமைகளுக்கும் ஒப்பாகச் செய்யத்தக்க தேவன் யார்?
உபாகமம் 3:24

கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார்; அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது. சங்கீதம் 145:3

தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் நமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்; தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்.
எபேசியர் 1:18-20

**பாவ அறிக்கை** – தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். சங்கீதம் 51:1

நன்றி நவிழ்தல் - உம்முடைய வாக்குத் தத்தத்தினிமித்தமும், உம்முடைய சித்தத்தின்படியேயும், இந்தப் பெரிய காரியங்களையெல்லாம் உமது அடியானுக்கு அறிவிக்கும்படிக்குத் தயவு செய்தீர். ஆகையால் தேவனாகிய கர்த்தரே, நீர் பெரியவர் என்று விளங்குகிறது; நாங்கள் எங்கள் காதுகளாலே கேட்ட சகல காரியங்களின்படியும், தேவரீருக்கு நிகரானவர் இல்லை; உம்மைத் தவிர வேறெ தேவனும் இல்லை.
2 சாமுவேல் 7:21-22

**பரிந்துரைத்தல்**:
நம் பிள்ளைகள்
________________________ கர்த்தரின் வலிமையில் மைரியமாக எழுந்து ________________ இன் ஆத்துமாவும் அவள் இருக்கும் அனைத்தும் கர்த்தரின் மகத்துவத்தைப் பறைசாற்றட்டும்! ______________________ கர்த்தருடைய துதிகளையும் அவருடைய வல்லமையையும், அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் வரும் தலைமுறையினருக்குக் சொல்வார்களாக.
(சங்கீதம் 138:3, லூக்கா 1:46, சங்கீதம் 78:4ஆ இருந்து)

…கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கபடுவாய்;
ரோமர் 10:9

ஆனாலும் அவர் தமது வல்லமையை வெளிப்படுத்ம்படி, தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களை இரட்சித்தார். சங்கீதம் 106:8

**ஆசிரியர்கள்**

ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது; தேவரீர் எல்லாற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கர்த்தினால் ஆகும். 1 நாளாகமம் 29:12

**பள்ளிக்கூடம்**

இவ்விதமாய் நான் அநேக ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக என் மகத்துவத்தையும் என் பரிசுத்தத்தையும் விளங்கப்பண்ணி, அறியப்படுவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள். எசேக்கியேல் 38:23

**அன்னையர்களுக்கு ஜெபம்**

கர்த்தர் எல்லார் மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின் மேலுமுள்ளது. கர்த்தாவே, உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும்; உம்முடைய பரிசத்தவாகள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள். மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும், உமது ராஜ்யத்தின் சிறந்த மகிமைப் பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு; உமது ராஜ்யத்தின் மகிமையை அறிவித்து, உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள்.

சங்கீதம் 145:9-12